# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,770 — 1930 ம் ௵ சித்திரைமீ 4 ந் திகதி வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

EDUCATION DEPARTMENT, CEYLON.

இலங்கை வித்தியா பகுதி.

### சுவபாஷா ஆசிரிய தராதலபத்திர பரீட்சைக்கான பிரமாணங்கள் :—1931.

குறிப்பு.—1929 ம் ஆண்டு ஜூலைமீ 10 ந் தேதியைக்கொண்ட சுவபாஷா ஆசிரிய தராதலபத்திர பரீட்சைகளுக்கான பிரமாணங்களிலிருந்து 1931 ம் ஆண்டுப் பரீட்சைக்குரிய பாகங்கள் இதனால் விலக்கப்படுகின்றன.

நேரமும் இடமும்.—1931 ம் ஆண்டு ஆகஸ்ட்மீ 10 ந் தேதி திங்கட்கிழமை தொடக்கமாக இப்பரீட்சை அநுராசபுரம், வதுளை, மட்டுக்களப்பு, வெங்தோட்டை, கொழும்பு, எகெலியகொடை, காலி, கம்பகா, கெகனுவலை, கிக்கடுவா, யாழ்ப்பாணம், கடுகணுவை, கண்டி, கிறிண்டிவெலை, மாத்துறை, மிரிகாமம், நீர்கொழும்பு, பரித்தித்துறை, தங்காலை, திருக்கோணமலை, வாதுவை, வென்னப்புவ முதலிய இடங்களில் நடாத்தப்படும்.

2. தகுதி.—பரீட்சார்த்திகள்.

(a) உறுதியற்ற தராதலபத்திரமுடைய ஆசிரியர்களாய் அல்லது அதற்குரிய ஆசிரியர்களாய் பதிவுசெய்யப்பட்டவர்களாயும்,

அல்லது (b) மாணவாசிரியர்களின் முதற்பரீட்சையில் (புதிய பிரமாணப்படி) சித்தியடைந்தவர்களாயும் அல்லது மாணவாசிரியர்களின் இரண்டாம் வருட பரீட்சையில் (பழைய பிரமாணப்படி) சித்தியடைந்தவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. தவிர்தல்களும் உடன்பாடுகளும்.—(a) (பழைய பிரமாணப்படி) மூன்றாந் தராதலபத்திரம் பெற்று மூன்று வருஷகாலம் திருப்தியான சேவைசெய்த பதியப்பட்ட ஆசிரியர்கள் இப்பரீட்சையிற் சித்தியடையும்பொழுது அவர்களுக்கு இரண்டாந் தராதலபத்திர மளிக்கப்படும்.

(b) ஆசிரிய வரைதற் தராதலபரீட்சையிற் சித்தியெய்திய மாணவர்கள் இப்பரீட்சையில் வரைதற்பாட மெடுக்காது தவிர்க்கப்படுவர்.

4. <u>விண்ணப்பங்கள்.</u>—(a) விண்ணப்பங்கள் குறித்த மாதிரிப் பத்திரத்தில் முழுப்பரீட்சையாகில் ரூபா 7/50 பெறுமதியான முத்திரைகளும், பகுதிப் பரீட்சையாகில் ரூபா 4 பெறுமதியான முத்திரைகளும் ஒட்டப்பெற்றும் முறையே அழிக்கப்பட்டும் மேமீ 1 ந் தேதிக்குமுன் வித்தியா கந்தோரிற் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

(b) மேற்சொல்லப்பட்ட 2 (b) ம் படி பிரவேசிக்கத் தகுதியுடைய மாணவர்கள் பிரவேச பணமின்றி ஏற்றுக் கொள்ளப்படுவர்.

5. <u>பிந்தியவிண்ணப்பங்கள்.</u>—(a) பிந்திய விண்ணப்பங்கள், முழுப்பரீட்சைக்கு ரூபா 12/50 பெறுமதியான முத்திரைகளும் பகுதிப் பரீட்சைக்கு ரூபா 8 பெறுமதியான முத்திரைகளும் ஒட்டப்பெற்றதா யிருந்தால் மே மாசம் 15 ந் தேதிவரையும் ஏற்கப்படும்.

(b) மாணவாசிரியர்களின் பிந்திய விண்ணப்பங்கள், முழுப் பரீட்சைக் ரூபா 3 பெறுமதியான முத்திரைகளும், பகுதிப் பரீட்சைக்கு ரூபா 2 பெறுமதியான முத்திரைகளும் கொண்டதா யிருத்தல் வேண்டும்

6. <u>பணந்திருப்பிக் கொடுத்தல்.</u>—பிரவேசித்தற்கு வேண்டிய நிபந்தனைகளை ஓர் மாணவன் திருப்திபண்ணுவிடத்து அவனின் விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரையின் பெறுமதியில் $\frac{4}{5}$ திருப்பி யளிக்கப்படும்.

7. <u>விலகிக்கொள்ளல்.</u>—(a) 6 ம் அத்தியாயத்திற் கூறப்பட்ட விஷயங்களின் பேரிலன்றிப் பணம் திருப்பி யளிக்கப்பட மாட்டாது. ஆயின், மே மாசம் 15 ந் தேதிக்கு முன் தம்மை விலக்கும்படியான அறிவித்தல் இக்கந்தோரிற் கிடைக்கும் பட்சத்தில் ஓர் சீட்டு (Voucher) அளிக்கப்படும். பரீட்சை ஒரு வருடத்திற்குள் நடாத்தப்படு மிடத்தும் மற்றைய நிபந்தனைகள் சரிவர நிறைவேற்றப்படுமிடத்தும் இச்சீட்டைக்கொண்டு ஓர் மாணவன் இன்னுமோர் முறை அப்பரீட்சையை எடுக்கலாம்.

(b) சௌக்கியவீனத்தினிமித்தம் விலகிக்கொள்ளும் மாணவர்களின் விஷயத்திலும் (a யிற் கூறியவாறு சீட்டுக் களளிக்கப்படும். ஆயின் அவர்களின் விலகும் அறிவித்தல், நிரப்பப்பட்ட விண்ணப்பமும் தகுதியுடைய வைத்திய உத்தியோகஸ்தரிடம் பெற்ற வைத்திய சாட்சிப் பத்திரமும் அணைக்கப்பட்டதாய் பரீட்சை தொடங்குவதற்குமுன் இக்கந்தோரில் பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

8. <u>பாடங்கள்.</u>—பரீட்சைக்குரிய பாடங்களாவன :

பகுதி I.

1. படிப்பித்தலின் விதிகளும் முறைகளும்.

பகுதி II. பிரிவு I.

2. பாஷையும் இலக்கியமும்.
3. இதிகாசம்.
4. பூமிசாத்திரம்.
5. ஆரம்ப கணிதம்

பகுதி II. பிரிவு II.

6. (a) ஆரம்பவிஞ்ஞான சாத்திரம் (b) நாட்டுச்சீவன சாத்திரம் அல்லது (c) வீட்டுப்பணி (தைய லுமுட்பட).
7. வரைதல்.
8. ஆங்கிலம்.
9. (a) பாளி அல்லது b) சமஸ்கிருதம்.
10. சுகாதாரமும் தேகப்பயிற்சியும்.
11. சங்கீதம் (பாடலுட்பட).

பரீட்சார்த்திகள் I. ம் பகுதியிலும், பிரிவு I. பகுதி II. ல் உள்ள ஒவ்வொரு பாடத்திலும், பிரிவு II. பகுதி II. ல் உள்ள இரு பாடங்களிலும் சித்தியடைதல் வேண்டும். பகுதி II. ல் இருந்து மூன்று பாடங்களுக்கு மேற்பட எடுக்கப் படாது.

பரீட்சார்த்திகள் I. ம் பகுதிக்கும் II. ம் பகுதிக்கும் வெவ்வேறு பரீட்சைகளிற் தோற்றிச் சித்தியெய்தலாம்.

9. <u>தராதலபத்திரங்கள்.</u>—இப்பரீட்சையிற் சித்தியடைந்த 17 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களுக்கே தராதல பத்திரங்க ளளிக்கப்படும். (ஒழுங்குச் சட்டத்தின் 78 ம் பிரமாணத்தைப் பார்க்க).

10. <u>பாடத்திட்டம்.</u>—மேற்கூறப்பட்ட பாடங்களின் விரிவான அட்டவணைகள் பின்வருமாறு :—

1.—படிப்பித்தலின் விதிகளும் முறைகளும்.

கல்வியின் நோக்கமும் பாடசாலையின் பணிகளும் ; பாடவிதானத் தெரிவு ; சுற்றுச்சார்புகளின் சக்தி.

பிள்ளையைப்பற்றிய ஆராய்ச்சி : வளர்ச்சியின் நிலைமைகள், மனத்தினதும் தேகத்தினதும் விசேட குறிகள் ; இவ்வாராய்ச்சியை பாடவிதானத்தெரிவின் பொது விதிகளுக்கும், கற்பிக்கும் முறைகளுக்கும், ஒற்றுமையான சீவிய ஒழுக்க முறைக்கும், பயன்படுத்தல்.

புருடத்துவ சுகாதாரமும் பிள்ளைப் பாதுகாப்பும் : (i.) தோலின் அமைப்பும் தொழில்களும், சுத்திசெய்தலும் நீராடலும், சூடான தேசத்துக்கான உடை, பாதங்கள், பற்கள், நகங்கள், மயிர், தேகாப்பியாசம், இளைப்பு, இளைப்பாறல், நித்திரை முதலியவற்றின் பாதுகாப்பு மாணவர்க்கும் குழந்தைகளுக்கு மேற்ற உணவும், பத்தியமும்.

(ii.) பிள்ளைகளின் வளர்ச்சி, அளவுக்கு மேலான பிரயாசையினதும், போதிய உணவின்மையினதும் அபாயம், சாதாரண வியாதிகளும், அவற்றின் ஏதுக்களும், அவற்றின் அறிகுறிகளும் சிகிச்சையும் ; கண்நோய், கொழுக்கிப்புழு, பட்டர்தாமரை-பேன், சிரங்கு, சின்னமுத்து, குக்கல் கூவைக்கட்டு, வயிற்றுக்கடுப்பு, காட்டுச்சுரம் சகாயஞ்செய்தலுக்கான முதல் விதிகள்.

முறை வகுப்புப் படிப்பித்தலில் வகுப்பு அறைப்பழக்கத்தின் விரிவுகள் தனிமையாகப்படிப்பித்தலுக்கும் வகுப்புப் படிப்பித்தலுக்குமுள்ள வித்தியாசம், வகுப்பின் ஒழுங்கு, வகுப்பின் அடக்கம், ஆசிரியரின் நிலை, விவேகமான பிள்ளைகளையும் விவேகமற்ற பிள்ளைகளையும் ஆதரித்தல், அவதானமும் அடக்கமும், கற்பிக்கும் வழிவகைகள் (கற்பலகை உருவங்கள், கேள்விகள், கதைகள், விவரிப்புகள், அப்பியாசங்களின் திருத்தங்கள்).

பாடசாலை வகுத்தல்: மாதிரிப் பாடசாலை, மாணவரை வகுத்தல், மாணவரின் வகுப்பேற்றம், நேரஅட்டவணை, மாதிரிக்கட்டிடம், நல்ல வேலைக்கு அவசியமான நிலைமைகள்.

பாடத்திட்டம்: அதனைச் சித்தமாக்கல், பாடக்குறிப்புக்கள், பாஷையும் எண்ணும் கற்பிக்கும் முறைகள் பாலர் வகுப்புத் தொடக்கம் 8 ம் வகுப்பு ஈறாகவுள்ள வகுப்புகட்குரியன.

2.—பாஷையும் இலக்கியமும்.

கேள்விப்பத்திரம், ஒரு கட்டுரையும், பாஷை சம்பந்தமாய் கேள்விகளையும், அடியில்வரும் நூல்களின் சரித்திர தொடர்பான கேள்விகளையும் உடையதாயிருக்கும்.

திருக்குறள்—அதிகாரங்கள் 81—105.
இராமாயணம்—ஆரணியகாண்டம், முதல் நான்கு படலங்களும்.
சிலப்பதிகாரம்—இந்திரவிழவூரெடுத்த காதை.

"தமிழ் மொழி வரலாறு"—V. K. சூரியநாராயண சாஸ்திரியாரால் எழுதப்பெற்றது (சைவசித்தாந்தநூற் பதிப்புக்கழகம், 6 பவளக்காரத் தெரு, சென்னை).

3.—இதிகாசம்.

(a) இலங்கைச் சரித்திரம் பொதுவிவரணம், 1800 கி. பி. யின் உள்ள காலந்தொடங்கி விசேட அவதானஞ் செலுத்த வேண்டும்
(b) "பிரித்தானியாவும் அபலாரும்" என்னும் புத்தகத்தில் 7 ம் பாகத்தின் பொருளடக்கம்.

4.—பூமிசாத்திரம்.

உலகபூமிசாத்திரம்.—"இலங்கைப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டமும் பொழிப்பும்" என்ற புத்தகத்தில் 8 ம் வகுப்பிற்குக் குறிக்கப்பட்ட அட்டவணையில் கேள்விகள் கொடுபடும்.

5. ஆரம்ப கணிதம்.
6. (a) ஆரம்ப விஞ்ஞான சாத்திரம்.
(b) நாட்டுச் சீவன சாத்திரம்.
(c) வீட்டுப்பணி தையலுமுட்பட.

"இலங்கைப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டமும் பொழிப்பும்" என்ற புத்தகத்தில் 6 ம், 7 ம், 8 ம் வகுப்புகளுக்குக் குறிக்கப்பட்ட அட்டவணையில் கேள்விகள் கொடுபடும். தையல் தைக்கக் கொடுபடும்.

7.—வரைதல்.

கருவிகளினுதவியின்றிக் கீறல்.—தமிழ் வடிவங்களின் பிரதிகளினின்றுங் கீறல். இயற்கைச் சித்திரம். இலைகள், பூக்கள், பழங்கள். தொகுதியாயுள்ள சாதாரண பொருட்களினின்றுங் கீறுதல்.

நிறவேலை.—மேற்கூறப்பட்ட அப்பியாசம் போன்றவைகளை நிறக்கட்டிகளால் அல்லது வர்ணலேகினிகளால் அல்லது தண்ணீர் வர்ணங்களால் கீறுதல்.

மாதிரிச் சித்திரம்.—தமிழ் எழுத்துக்களின் மாதிரி வடிவங்கள், இலைகள், பழங்கள், பூக்கள், வேறு இயற்கையான பொருட்கள் முதலியன.

கற்பலகைச் சித்திரம்.—ஞாபகத்திலிருந்து தினசரி உபயோகத்துக்கான பொருட்கள், செடிகள், பழங்கள், வெளிப்பாட்டுருவங்களைக் கீறுதல்.

8.—ஆங்கிலம்.

9.—(a) பாளி, (b) சமஸ்கிருதம்.

விடைப்பத்திரம் அடியில் வருவனவற்றைச் சேர்க்கும்

1. ஆயத்தப்படுத்தப்படாத கட்டுரைகள் பரீட்சார்த்தியின் தாய் மொழியில் மொழிபெயர்த்தல்.
2. மேல்காட்டிய வசனங்களிலுள்ள இலக்கணங்களைப்பற்றி கேள்விகள்.
3. ஆங்கிலத்தில், பாளியில் அல்லது சமஸ்கிருதத்தில் மொழிபெயர்ப்பதற்காக வசனங்கள்.
4. ஆங்கிலத்தில், பாளியில் அல்லது சமஸ்கிருதத்தில் மொழிபெயர்ப்பதற்காக ஒரு இலகுவான தொடர்புடைய பகுதி.

ஆங்கிலம், ஆங்கில பாடசாலைகளிலுள்ள VI. ம் வகுப்புக்குரிய பாகமாகும்.

10.—சுகாதாரமும் தேகப்பயிற்சியும்.

அடியில் வரும் நூல்களின் பொருளடக்கத்தில் கேள்விகள் கொடுபடும்.
தேகப்பயிற்சி அட்டவணை (வித்தியா சங்கம்). 1919
வாழ்க்கையும், ஒளியும், துப்புரவும். (புதுப்பதிப்பு).
ஆரோக்கிய முறையோடொத்த சம்பாஷணைகள்.

11.—சங்கீதம்.

அடியில் வருவனவற்றில் கேள்விகள் கேட்கப்படும்.

1. தாளக்கியானம்.
2. சங்கராபரணச் சுரவரிசை, அதில் அப்பியாசங்களும்.
3. செவிப்பயிற்சி.
4. சாதாரண இசைகள்.

அப்பியாசப் பயிற்சியொன்று கொடுக்கப்படும். பரீட்சை முடிந்தவுடன் இப்பரீட்சைக்காகப் பரீட்சார்த்திகள் கொழும்புக்கு வரல் வேண்டும்.

வித்தியா கந்தோர், கொழும்பு,
1930 ம் ஆண்டு மார்ச்மீ 25 ந் திகதி,

எல். மெக்றே,
வித்தியாதிகாரி

## அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரங்கள்.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வேரகொடஎலாவையும் கித்தன்பகுவாவையும் சேர்க்கும் பாகம் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னாச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமப்படத்து இல. 19,955. குறிச்சி—வரகொட அல்லது சேதவத்த.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | வேரகொடவெல (இறைவரி இல. 99) .. | புல்வயல் .. | ஜெ. பீ. மென்டிஸ்சின் பெண் .. | 0 | 1 | 25 |
| 2 | ஷை ( ஷை 110) .. | தெரு .. | முடிக்குரியவும், மிஸ்றர். பீ. ஈ. பீரிஸ்வும் | 0 | 0 | 1·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1930 ம் ஞு வைகாசி மாசம் 16 ந் தேதியிலன்று 10 மணிக்கு இந்தக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1930 ம் ஞு சித்திரைமீ 1 ந் உ.

ஈ. எம். கண்ணங்கற,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச்சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தோம்பே சவக்காலைக்குப்போகும் றேட்டு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 19,938. குறிச்சி—தோம்பே.

| துண்டு | காணியினது பெயர் | விவரம் | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கொன்னகாவத்த .. | வளவு, 3 இளந்தென்னையுள்ளது .. | ஆர். பீ. பொடியன் சிங்கோ .. | 0 | 0 | 4·4 |
| 2 | கலபொடவத்த .. | வளவு, 2 இளந்தென்னையும், 3 தென்னையும், 1 பலாமரமும் உள்ளது | எல். டீ. தொமஸ், எல். டீ. கெருத் சிங்கோ | 0 | 0 | 9·5 |
| 3 | ஷை .. | வளவு, 1 தென்னையும், 1 கித்துல் மரமும் உள்ளது | எல். பபிலிஸ், எல். மாதரிஸ், எல். கென்டிறிக், எஸ் கே. பீரிஸ் | 0 | 0 | 3·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞுத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் ஞு வைகாசி மாசம் 27 ந் தேதியிலன்று 10 மணிக்கு இக்கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
19 0 ம் ஞு சித்திரைமீ 1 ந் உ.

எச். பீ. கொவ்மன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஞு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வத்தகமத்தில் பாவிப்புக் கெடுக்கப்படும் தண்ணீரை அதிகரித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 8,767. குறிச்சி—யத்தவர, பல்லெகமபகாகோறளை பாததும்பற.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மங்தோலகிரிகண்ட எஸ்ரேற் .. | பெருங்காடு .. | கூனஸ்கிரி தேயிலை கம்பனி .. | 1 | 0 | 26 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. | 0 | 0 | 5 |
| 3 | ஷை .. | பத்தனை .. | ஷை .. | 12 | 3 | 7 |
| 4 | ஷை .. | பெருங்காடு .. | ஷை .. | 1 | 3 | 5 |
| 5 | — .. | அடிப்பாதை .. | ஷை .. | 0 | 0 | 30 |
| 6 | மங்தோலகிரிகண்ட எஸ்ரேற் .. | பெருங்காடு .. | ஷை .. | 2 | 1 | 39 |
| 7 | ஷை .. | பத்தனை .. | ஷை . | 5 | 2 | 29 |
| 8 | ஷை .. | பத்தனை .. | ஷை .. | 17 | 1 | 30 |
| 9 | ஷை .. | பத்தனை .. | ஷை .. | 0 | 0 | 3 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1930 ம் ஸ்ரீ ஏப்பிரில் மாசம் 26 ந் தேதியிலன்று 10 மணிக்கு கண்டிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கண்டிக் கச்சேரி,
1930 ம் ஸ்ரீ மார்ச்மீ 31 ந் உ.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏசண்டு, கண்டி.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இரியகாமடவில் பள்ளிக்கூடம் ஒன்று கட்டுகிறதற்காக என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,737. குறிச்சி—இரிமெட்டியாவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | அம்பலமாவனை .. | தோட்டம் .. | வியனகாமடேபையா, சுவனிஸ்ச, பன்சல கெதரலெயிசா | 0 | 3 | 8 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 9 5 |
| | | | | 0 | 3 | 17 5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1930 ம் ஸ்ரீ சித்திரைமாசம் 28 ந் தேதியிலன்று 10 மணிக்கு மாத்தளைக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த்தாம் சாதிக்கும்உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தளைக் கச்சேரி,
1930 ம் ஸ்ரீ பங்குனிமீ 28 ந் உ.

சீ. ஈ. ஜோன்ஸ்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நுவரஎலியா புரூக்சைட் ஹைபொரஸ்ட் றேட்டிலே இரண்டாம் கட்டையிலே கல்லுக்குழி என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 8,786. குறிச்சி—புரூக்சைட்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிளென்டெவன் தோட்டம் .. | தேயிலை .. | எங்கிலோ சிலோன் தோட்டம் .. | 0 | 2 | 10·7 |
| 2 | ஷை .. .. | கல்லுக்குழி .. | ஷை .. .. | 0 | 0 | 2·5 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸ்ரீ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைபபற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் ஸ்ரீ மேமீ 5 ந் தேதியிலன்று பின்னேரம் 2 மணிக்கு நுவரஎலியா கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நுவரஎலியா கச்சேரி,
1930 ம் ஸ்ரீ மார்ச்சுமீ 19 ந் உ.

டபிள்யு. ஈ. ஒப்டே,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸ்ரீ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் இலங்கை கவன்மெண்டு கடல்கரை வளி றேல்றேட்டில் 67¼ கட்டை கிந்தொட்ட றேஸ்பிட்டனி இஸ்டேசனை பெரிப்பிக்கிறதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 13,928. குறிச்சி—பூஸ்ஸ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | மஹகெதறவத்தகபல்ல | தென்னங்காணி .. | (1) சோண் த ஸொய்ஸா வாறிஸ் அபேயசேகற, கதுறுப்பே, (2) எமலியா த ஸொயிஸா | 0 | 0 | 8 |

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 2 | மஹகெதறவத்த அல்லது மாவதவெல | தென்னங்காணி .. | பேதுறு ஹேவாசாதிஸ் த ஸில்வா, பட்டபொள | 0 | 1 | 16·3 |
| 3 | மாவதவத்த அல்லது பாளுகொறட்டுவ | ஷை .. | (1) சோன் த ஸ்வாறிஸ் அபேஸேகற, கதுறு பே, (2) கறுமுனிரமலியா த ஸொயிஸா | 0 | 0 | 0·8 |
| 4 | மாவதவத்த .. | ஷை .. | (1) ஸ்துஹிங்க ஆதிரிஸ், பூஸ்ஸ, (2) கறுமுனி றசினு த ஸொயிஸா | 0 | 0 | 9·3 |
| 5 | ஷை .. | ஷை .. | பஸ்குவல்ஹந்தி பபுன் அப்பு, றதகமஹாகொடை | 0 | 0 | 22 |
| 6 | மாவதவெல .. | ஷை .. | (1) வீரத்தன அன்திரிஸ் மன்டிஸ், (?) வீரத்தன அவுதிரிஸ், (3) ஸிமன் ஆறச்சி இயன்ஹாமி, 4) வீரத்தன தாவித், (5) வீரத்தன தொரேருனிஸ், (6) களவள ஓவினிஸ் அப்பு, (7) களவள லயிறிஸ்ஹாமி | 0 | 0 | 17·7 |
| 7 | வத்தகறவத்த .. | ஷை .. | (1) வீரத்தன அன்திரிஸ் மன்டிஸ், (2) வீரத்தன அவுதிரிஸ், (3) ஸிமன் ஆரச்சி இயன்ஹாமி, (4) வீரத்தன தாவித், (5) வீரத்தன தொரேருனிஸ், (6) களவள ஒவினிஸ் அப்பு, (7) களவள லயிறிஸ் ஹாமி, (8) களவள தேதியஸ், (9) ஸ்வாறிஸ் மாற்சள், (10) கோனுபினுவள கரேருவிஸ் அப்பு | 0 | 1 | 7·5 |
| 8 | — .. | ஓலைமேய்ந்த கூடாரம் | (1) வீரத்தன ஸெய்யோனுஹாமி, (2) வீரத்தன அன்திரிஸ்மன்டிஸ், (3) வீரத்தன அவுதியஸ், (4) ஸிமன் ஆறச்சி இயன்ஹாமி, (5) வீரத்தன தாவித், (6) வீரத்தன தொரேருனிஸ், (7) களவள் ஒவினிஸ் அப்பு, (8) களவள லயிதிஸ்ஹாமி | 0 | 0 | 0·4 |
| 9 | — .. | கல்கட்டு கிணறு .. | களவள ஒவினிஸ் அப்பு பூஸ்ஸ .. | 0 | 0 | 0·1 |
| 10 | — .. | ஓலை மேய்ந்த வரிச்சி வீட்டில் ஒரு பங்கு | (1) பஸ்குவல்ஹந்தி அன்னிஸ்ஹாமி, (2) வீரத்தன அந்திரிஸ் மன்டிஸ், (3) வீரத்தன அவதிரிஸ், (4) ஸிமன் ஆறச்சி இயன்ஹாமி, (5) வீரத்தன தாவித், (6) வீரத்தன தொரேருனிஸ், (7) களவள ஒவினிஸ் அப்பு, (8) களவள லயிதிஸ்ஹாமி | 0 | 0 | 0·4 |
| 11 | — .. | ஓலைமேய்ந்த வரிச்சிவீடு | (1) களவளசாறளிஸ், (2) வீரத்தன அன்திரிஸ் மன்டிஸ், (3) வீரத்தன அவுதிரிஸ், (4) ஸிமன் ஆறச்சி இயன்ஹாமி, (5) வீரத்தன தாவித், (6) வீரத்தன தொரேருனிஸ், (7) களவள ஒவினிஸ், (8) களவள லயிதிஸ் ஹாமி | 0 | 0 | 0·8 |
| 12 | வத்தக்கறவத்த .. | தென்னங்காணி, ஓலை மேய்த வரிச்சிவீடு, ஷை ஓலைமேய்ந்த ஓலைக் குசினியும் | (1) களவள ஒவிலிஸ் அப்பு, (2) ஜயானிஸ் மன்டின், (3) குமாறசிங்க ஆறனியஸ், (4 குமாரசிங்க அறனேலிஸ் அப்பு, (5) குமாரசிங்க அவுனேதிஸ் அப்பு, (6) முறுப்புஆதுறஜவன் யெயின்ஸ் மன்டிஸ் | 0 | 0 | 6·1 |
| 13 | கதுறுகஈவத்த .. | தென்னங்காணி .. | அமிலிமன்டிஸ் விக்கிறமசிங்க .. | 0 | 0 | 17·4 |
| 14 | ஷை .. | ஷை கல்கட்டு கிணறும், கருண்யும் | (1) சமறனயகரேபன் மிறன்டு, (2, குமாறசிங்க ஆறனியஸ்காமி | 0 | 0 | 16·3 |
| 15 | ஷை .. | தென்னங்காணி ... | (1) சோன் த ஸவாறிஸ் அபேஸேகற, (2) எல்விலியம் மன்டிஸ் | 0 | 0 | 5 |
| 16 | ஷை .. | ஷை .. | (1) சமறனயகரேபன் மன்டிஸ், (2) குமாரசிங்க ஆயுனியஸ்காமி | 0 | 0 | 1 |
| 17 | ஷை .. | ஷை .. | (1) அமிலிமன்டிஸ் விக்றமசிங்க, (2) குமாரசிங்க அறனேளிஸ் | 0 | 0 | 4 |
| 18 | துலேவத்த .. | ஷை .. | களவள லயிதிஸ்காமி .. .. | 0 | 0 | 5·4 |
| 19 | வத்தக்கறவத்த .. | வெண்நிலம் .. | (1) களவள ஒவினிஸ் அப்பு, (2) சுவானிஸ் மன்டிஸ், (3) குமாரசிங்க ஆறனியஸ்காமி, (4) குமாரசிங்க அறனேலிஸ் அப்பு, (5) முறுப்பு ஆதுற சவனேசின் மன்டிஸ் | 0 | 0 | 1 6 |
| 20 | ஷை .. | தென்னங்காணி .. | (1) வீரத்தன அந்திரிஸ் மன்டிஸ், (2) வீரத்தன அவுதிரிஸ், (3) களவள ஒவினிஸ், (4) களவளலயிதிஸ், (5) வீரத்தன தொரேருனிஸ், (6) வீரத்தன தாவித் | 0 | 0 | 4 |
| 21 | மாலதவெல .. | ஷை .. | (1) களவள லயிதிஸ்காமி, (2) களவள ஸறனேலிஸ் அப்பு | 0 | 0 | 5·9 |

| துண்டு. | விவரம். காணியினது பெயர். | | உரித்தாளியின்பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 22 | மாலதவெல | தெனிய | (1) ஸிமன் ஆறச்சி இஸன்காமி, (2) வீரத்தன அன்திரிஸ் மன்டிஸ், (3) வீரத்தன அவுதிரிஸ், (4) வீரத்தன தாவித், 5) வீரத்தன தொரேருனிஸ், (6) களவள ஒவினிஸ் அப்பு, (7) களவள லயிதிஸ்காமி | 0 0 5 |
| 23 | கெதிவளவத்த | தென்னங்காணி | (1) கோனுபிஹுவள கரோனிஸ் அப்பு, (2) ஸிமன் ஆறச்சி இஸன்காமி, (3) வீரத்தன அந்திரிஸ் மன்டிஸ், (4) வீரத்தன அவுதிரிஸ், (5) வீரத்தன தாவித், (6) வீரத்தன தொரேருனிஸ் (7) களவள ஒவினிஸ், (8) களவள லயிதிஸ்காமி, (9) சுவாணிஸ்மன்டிஸ், (10) சுவாதி ஜன்திரிஸ்காமி, (11) மனுவெல்துற திதறிக் அப்பு | 0 0 7·8 |
| 24 | துவேவத்த | தென்னங்காணி | பேதுறுசெவ சாணிஸ் சில்வா, பட்டபொள | 0 [illegible] 2·5 |
| 25 | மாவதவெல | தெனிய | ஷை | 0 0 11·7 |
| 26 | துலேவத்த | தென்னங்காணி | ஷை | 0 0 7 |
| 27 | ஷை | ஷை | கறுமுனி இரோனிஸ் த ஸொரயிஸா | 0 0 28·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஆடு-த்து காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் ஆடு மே மாதம் 30 ந் தேதியிலன்று 2 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக் அககாணிகளிலுள்ள உடைமைகளினது தன்மையையும் அவ்வுடைமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1930 ம் ஆடு மார்ச்மீ 31 ந் உ.

எம். எம் வெடர்பேன்,
தென்மாகாண அரசாட்சி ஏஜ

---

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தங்காலை—அம்பந்தோட்டை ரோட் ங்க சட்டைகுள் தங்காலை கிறம ஓயாவின் பாலத்துக்கருகாமையான ரோட்டை சரிபண்ணுகிறதற்காக என்னு தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 14,051. குறிச்சி—தங்காலை நாகறீக்குள்.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | ம். ப. |
|---|---|---|---|---|
| 1 | காலேவத்த (வரிப்பணம் நொ. 443) | 10 வயது தென்னமரம் ஒன்றும், 5வயது 3 தென்னமரம், 5 வயது மூங்கில் பறுைறயும், ஒரு ஓட்டு வீடும், ஒரு சுண்ணும்பு கட்டிட காணுமுள்ள தோட்டம் | சுகன்காமை அபேவீர விஜேவிக்ற புஞ்சிகேவாகே அறனேலிஸ் | 0 18·45 |

பிரதமபடத்து இல. 315. குறிச்சி—மடில்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம் | உரித்தாளியின் பெயர். | விசாலம். |
|---|---|---|---|---|
| 8F | போககவத்த (வரிப்பணம் நொ. 649) | தென்னந்தோட்டம் | தங்கலே விதானகே ஸின்( ... அப்பு | 0 0 1 |
| 8G | போககவத்த (வரிப்பணம் நொ. 647) | வெண்காணி | தங்காலே கோகுகென்னதி ... ஜகோ ... றிஸ் | 0 0 0·67 |
| 8H | கற்ககவத்த (வரிப்பணம் நொ. 646) | 50 வயதுள்ள 2 தென்னமரம் உள்ள தோட்டம் | ...ன்னதிகே (1) தாங்காலே, கோ...லே அன் ஜகோதிஸ், (2) ...திகே ஹென் திருபது குருதுப...(3) தங்காலே திறிக் ஸின்ஞோ...றியா, (4) தங் என். ஏ. விகற...ஜேவீறமுனவீற காலே பீடற... | 0 0 2·58 |
| 8I | கறககவத்த (வரிப்பணம் நொ. 645A) | 50 வயதுள்ள 6 தென்னமரம் உள்ள தோட்டம் | தங்காலே என்... ...விக்றமசூறிய | 0 0 6·17 |
| 8J | கறககவத்த வரிப்பணம் நொ. (45) | 50 வயதுள்ள 10 தென்னமரம் 10 ம் 5 வயதுள்ள தென்னமரம் ஒன்றும் உள்ள தோட்டம் | (1) தங்... அன்கோதிஸ் த ஸில் வா ...பவீர, (2) தங்காலே ஜோன் ...சூறிய | 0 0 9·34 |
| 8K | கறககவத்த (வரிப்பணம் நொ. 524, 524A) | ஓடுவீட்டின் பாகம் | ...ங்காலே அனதறயஸ் த ஸில்வா அபேவீர, தங்காலே களுஹுன்னதிகே ஸரலென்சிஹோம் | 0 0 0·50 |
| 8L | கறககவத்த (வரிப்பணம் நொ 522, 523) | 25 வயதில் 2 தெ...மரமும் ஓடு வீட்டின் ப...கமுமுள்ள தென்னந்தோட்டம் | தங்காலே களுஹுன்னதிகே அப்பு ஸின்ஞோ | 0 0 2·25 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876ம் வருடத்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின் படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1930 ம் வரு மேமீ 6 ந் தேதியிலன்று 9 மணிக்கு தங்காலை தானயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பந்தோட்டை கச்சேரி,
1930 ம் ஆண்டு ஏப்றில்மீ 1 ந் வ.

பீ. சரவணமுத்து,
அரசாட்சி ஏசண்டு.

---

### உரிமைபெறும் பாழ்நிலத்தின் முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

---

[அறிவித்தல் இலக்கம் 10,400, அனுராசபுரம்.]

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1930 வரு (ஏப்பிரல்) சித்திரைமீ 4 ந் திகதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச் சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ஜே. லயிற் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சால்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப் சப்படாததாகிய சொல்லிய காணிகளை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்து மூலமாய் வெளிப்த்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. லயிற்,
விசேஷ உத்தியோகத்தர்.

நிர்ணயிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஞெபிசர்) காணி பெற்று கியோகத்தரிடமும் அவைகளின் அழவைப்படங்கள் (சர்வேயர் ஜெனரல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் ள்ளலாம்.

(b)

(c) ாணிகளுக்குள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

குட்பட விறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித்துண்டுகளி லுட்படடிராது கீழ்க்காணு மெல்லேகட் மன்றி அவ்வருங் காணித்துண்டு எதுவாயினும் மேற்படி அறிவித்தலின்கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாதது காணித்துண்டைக்குறித்து உரிமைசொல்லவும் வேண்டியதில்லை.

சுட்டிய காணிகளின் விபரம்.

வடமத்திய ாணம், கலாகம் பலாத்த, உந்துருவக்கோறளை கந்துதுலானவைச் சார்ந்த கறவிலகல கிராமத்திலுள்ள கீழ்க்காணுங் ணித்துண்டுகள். இக்காணித்துண்டுகளெல்லாங் கீழ்க்காணு மெல்லைகட்குள்ளிருக்கின்றன.

வடக்கு : பகால கிராம எல்லை;

கிழக்கு : கல்கெதி கம கிராம எல்லை, கல்கெதியாகம கிராம எல்லை (பாதையின் பகுதி), கல்கெதியாகம, பமுணுகம கிராமங்களி னெல்லைகள் ;

தெற்கு : வேதினிகம ராம எல்லை, வேதினிகம, சியம்பலாவ கிராமங்களி னெல்லைகள் (கிரவான எலவின் பகுதி), சியம்பலாவ கிராம எல்லை ;

மேற்கு ; நன்வத்தேகம ராம எல்லை, பினுவ கிராம எல்லை (நன்வத்தேகமவிலிருந்து செல்லுங் கருத்தைப் பாதையின் பகுதி) , பினுவ கிராம எல்லை.

இலங்கை யளவைப் பிரதமப்படம் 1,009.

| காணித்துண்டு. | காணியின் பெயர் | விசாலம், ஏ. று. ப. |
|---|---|---|
| 37A .. | இஹலவெல .. | |
| 37B .. | ஷை .. | 0 1 17 |
| 37C .. | ஷை .. | 1 0 10 |
| 37D .. | ஷை .. | 1 0 29 |
| | | 0 0 1 |
| | மொத்தம் .. | 2 2 17 |

[அனுராசபுரம் வி. உ. 6—1930.]

[அறிவித்தல் இலக்கம் 10,401, இரத்தினபுரி.]

இதன்பின் சொல்லப்படுங் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள் 1930 ௵ (ஏப்பிரல்) சித்திரை௴ 4 ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள் 1897 ம், 1899 ம், 1900 ம், 1903 ம், 1927 ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28 ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகத்தர் ரீ. ஜீ. விலெற் துரை அவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்துமூலமாயேனுந் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில், சொல்லிய விசேஷ உத்தியோகத்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு சொல்லிய காணிகளை அல்லது அவைகளுள் உரித்துப்பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ரீ. ஜீ. விலெற்,
விசேஷ உத்தியோகத்தர்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் கொழும்பு (செற்றில்மென் ஶெரபிசர்) காணி நிர்ணய உத்தியோகத்தரிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனரல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

(c) இவ்வறிவித்தலிற் சொல்லப்பட்டிருக்குங் காணித்துண்டுகளிலுட்பட்டிராது கீழ்க்காணு மெல்லைகட்கூட்படவிருக்குங் காணித்துண்டெதுவாயினும் மேற்படி யறிவித்தலின்கீழ் விசாரணைபண்ணப்படமாட்டாதது மன்றி அவ்வித காணித்துண்டைக் குறித்து உரிமைசொல்லவும் வேண்டியதில்லை.

சுட்டிய காணிகளின் விபரம்.

